# நாகர்கோவிலில் மதியழகன் மறியல்


REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ் : ஒரு அணா | சென்னை : ஆடிமீ 18உ திங்கள் (2—8—54) | மலர் : 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர் : ஆடிமீ 19உ செவ்வாய் (3—8—54) | இதழ் : 42


# டெல்லி ஏகாதிபத்தியத்தின் ஓர வஞ்சனை

## இலங்கை இந்தியர் எதிர்காலம் சென்னையினுடையதாம்!

### பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கு!

## நிதி அமைச்சர் தேஷ்முக் பேச்சு வடவரின் வேடத்தைக் கலைக்கிறது!

**பஞ்சாபிலிருந்தும், கிழக்கு வங்கத்திலிருந்தும் வந்த அகதிகளை ஏற்றுக்கொண்டு, அவர்கள் வாழ்வுக்குக் கோடிக்கணக்கில் பணம் செலவிட்டுள்ள டில்லி ஏகாதிபத்தியம், இலங்கை இந்தியர் பிரச்னை மட்டும், மாகாண சர்க்காருடையது என்று கூறி தன் பொறுப்பைத் தட்டிக் கழிக்க முயல்வதாகத் தெரிகிறது.**

பெங்களூர், ஆக. 1—

"இன்னும் 3 மாதங்களில் இலங்கையிலிருந்து திருப்பி அனுப்பப்படும் இந்தியரை ஏற்று வேண்டுவன செய்ய சென்னை சர்க்காரால் முடியும். இந்த பிரச்னை முக்கியமாக சென்னை சர்க்காரின் கவனத்திற்கே உரியது,"

என்று இந்திய நிதிமந்திரி தேஷ்முக் நிருபர்களிடம் கூறுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் குறிப்பிட்டதாவது:

"நான் இலங்கைச் சென்றபோது இந்தியா — இலங்கை ஒப்பந்த அமுலில் ஒரு முக்கியமான கட்டம் ஏற்பட்டிருந்தது. இலங்கை இந்தியர் தற்காலிக பர்மிட்டை வைத்திருப்பவர்கள் 80,000 முதல், 1,50,000 பேர் வரை உள்ளனர். அவர்களுடைய 'விஸா'க்களைப் புதுப்பிப்பது பற்றி உடன்பாடு அவசியம்; அவர்களில் எத்தனை பேர் வேலையை இலங்கையர் பார்க்க முடிகிறதோ, அவர்களுடைய 'விஸா'க்கள் புதுப்பிக்கப்படமாட்டாது. இந்த ஏற்பாட்டிற்கு நாம் இணங்கத்தான் வேண்டும். ஆகவே எத்தனை பேர் வீதம் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்படவேண்டும் என்பது பற்றித்தான் உடன்பாடு தேவை. இது பற்றி இலங்கை அதிகாரிகளுக்கும் இந்திய ஹைகமிஷனருக்கு மிடையே உடன்பாடு ஏற்பட்டுள்ளது. இந்தியாவுக்குத் திரும்பும் முதல் கோஷ்டிக்கு 3 மாத நோட்டீஸ் தரப்படும். மற்றவர்களுக்கு நீண்டகால நோட்டீஸ்கள் தரப்படும்.

மற்ற இந்தியர்கள் 8 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் சிலருக்கு இலங்கை பிரஜா உரிமை கிடைக்கலாம்; சிலருக்குக் கிடைக்காமலிருக்கலாம், இலங்கை பிரஜா உரிமையும் கிடைக்காமல் இந்திய பிரஜைகளாகவும் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களின் பிரச்னையே தொல்லை கொடுக்கும்," என்றார்.

# மேனனுக்கு அழைப்பு!

பிரெஞ்சிந்திய கவர்னராகப் புதுச்சேரியிலிருக்கும் மேனனின் நடவடிக்கைகளில் அதிருப்தி கொண்டிருப்பதால் பிரெஞ்சு அரசாங்கம் மேனனைத் தாயகத்திற்குத் திரும்பி அழைத்துக் கொள்ளக் கூடும் எனத் தெரிகிறது.

## கோவைக்கு மருத்துவக் கல்லூரி!

### விரைவில் திறக்கப்படுமாம்!

சென்னை, ஆக. 1—

'கோயம்புத்தூரில் விரைவிலேயே ஒரு மருத்துவக் கல்லூரி திறக்கப்படும்' என கல்வி, நிதி அமைச்சர் திரு சுப்ரமணியம் நேற்று தண்ணுமலை மன்றத்தில் குஜராத்தி இளைஞர் கழகத்தினர் சார்பில் பேசுகையில் அறிவித்தார்.

# படித்தவர்கள் வேலையின்றி வாடுவதைப் போக்க!

## மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கை

### சென்னை மாநிலம் புறக்கணிக்கப்படுகிறது!

புதுடில்லி, ஆக. 1—

படித்தவர்களிடையே நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கான இந்திய அரசாங்கத்தின் திட்டப்படி வரும் நிதி நடப்பு ஆண்டு துவங்கும் நான்கு மாதங்களுக்குள்ளாகவே மாநில அரசாங்கங்கள், 17,640 ஆசிரியர்களை வேலைக்கமர்த்திக்கொள்ள மத்திய அரசாங்கம் அனுமதி தந்துள்ளது.

21,500 ஆசிரியர்கள் தேவை என்று மாநில அரசாங்கங்களிடமிருந்து இதுவரை வந்துள்ள கோரிக்கைக்கு இணங்கவே மத்திய அரசாங்கம் இந்த அனுமதியைத் தந்திருக்கிறது.

இந்த உத்தரவின்படி மணிப்பூர் 50; திரு-கொச்சி 550; விந்திய பிரதேசம் 700; சௌராஷ்டிரம் 1000; பஞ்சாப் 3,800; மேற்கு வங்கம் 5,035; பம்பாய் 6,505—என்ற எண்ணிக்கை உள்ள ஆசிரியர்களை புதியதாய் வேலைக்கமர்த்திக் கொள்வர்.

சென்னை மாநிலத்தில் படித்தவர்களிடையேயுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க மத்திய அரசாங்கத்தின் இந்தப் புதிய திட்டத்தில் எந்தவித வழியும் வகுக்கப்படவில்லை என்பதைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

புதிய ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டதும் ஓராசிரியரைக்கொண்ட பள்ளிகளை மாநில அரசாங்கம் துவக்க வேண்டும். அந்தப் பள்ளிகளின் நிர்வாகத்திற்கு மத்திய அரசாங்கம் மூன்று ஆண்டுகளுக்கு மாநில அரசாங்கங்களுக்கு உதவி செய்யும். பிறகு மாநில அரசாங்கங்கள் தொடர்ந்து நிரந்தரமாக அந்தப் பள்ளிகளை நிர்வகிக்கப் போரப்படுவார்கள் எனத் தெரிகிறது.

வேலைக்கெடுத்துக்கொள்ளப்படுகிற ஒவ்வொரு புதிய ஆசிரியருக்கும் முதல் வருடச் சம்பளத்தில் 75 சதவிகிதமும், இரண்டாம் ஆண்டில் 50 சதவிகிதமும் மூன்றாம் ஆண்டில் 25 சதவிகிதமும் மத்திய அரசாங்கம் தரும்.

புதியதாக நிறுவப்படும் பள்ளிக்கூடங்களுக்கான செலவுக்கும் மத்திய அரசாங்கம் பண உதவி செய்யும் எனத் தெரிகிறது.

சியோல், ஆக. 1—

நடுநிலைமை நாடுகளின் மேற்பார்வைக் குழுவைச் சேர்ந்த நான்கு செக்கோஸ்லேவேகிய அங்கத்தினர்களை, யாரோ ஒருவன் கைத்துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிகிறது.

# திரு-தமிழர் அறப்போரில் தி. மு. க. பங்கேற்கிறது

## நீதிமன்றத்தில் 6-ந் தேதி அடையாள மறியல்

# மதுரையில் தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அறிவிப்பு

## தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைந்தவுடன் தி. த. நா. காங்கிரஸ் கலைக்கப்படும்

**திருவிதாங்கூர் தமிழர் அறப்போரில் தி. மு. கழகம் கலந்துகொள்ள இருக்கிறது. ஆகஸ்டு 6-ந் தேதியன்று நாகர்கோவிலில் தி. மு. கழகத் துணைச் செயலாளர் கே. ஏ. மதியழகன் தலைமையில் அடையாள மறியல் நடைபெறும்.**

சிறையிலிருக்கும் திருவாங்கூர் தமிழர் காங்கிரசின் தலைவர் தோழர் நேசமணி விடுதலையடைந்த பின்னர் அவருடன் ஆலோசனை செய்து மேற்கொண்டு அறப்போரில் பங்கு கொள்வது பற்றி முடிவு செய்யப்படும்.

மதுரை, ஜூலை 31—

"திருவிதாங்கூர் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்தோடு இணைக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தும் பொருட்டு 6—8—54 அன்று ஒரு நாள் திராவிட முன்னேற்றக் கழகம் அடையாள மறியல் நடத்தும்."

"அன்று நாகர்கோவில் நீதிமன்றத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் காலையிலிருந்து மாலை வரையிலும் மறியல் நடைபெறும்,"

என்று, திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள், மதுரை சுந்தரம் தியேட்டரில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

திருவாங்கூர் தமிழர் அறப்போரை நேரில் காணச் சென்ற பொதுச் செயலாளர் அண்ணாதுரை, மதுரை நகர தி. மு. கழகச் செயலாளர் என். முத்து ஆகியோர் மதுரை திரும்பினர்.

அறப்போரில் தி. மு. கழகம் எவ்விதம் பங்கு கொள்வது என்பது பற்றி ஆலோசனை செய்ய நடைபெற்ற கூட்டத்தில் பொதுச் செயலாளர் இச்செய்தியை அறிவித்தார்,

மேலும் அவர் கூறியதாவது:—

"திருவாங்கூர் தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைய வேண்டுமென்பதற்கு இயற்கையான வசதிகள் அமைந்திருக்கின்றன. இப்பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்பதற்கு முழு ஆதரவு இருக்கிறதென்பதற்கு இந்தத் தொகுதி சட்டசபை உறுப்பினர்கள் அனைவரும் தமிழர்களாகவே இருப்பது ஒரு நல்ல சான்றாகும்.

தமிழக அறப்போராட்டத் தலைவர்களை எல்லாம் நாகர்கோவிலில் சந்தித்தேன். அத்தனைபேரும் இந்த அறப்போரை கடைசி வரை நடத்தப் போவதாகக் கூறினார்கள். தமிழ் நாடு காங்கிரஸ் குழுவோ, சென்னை முதல் அமைச்சர் காமராசரோ, அல்லது காங்கிரஸ் மேலிடமோ கூட இந்த அறப்போரை நிறுத்துமாறு கூறினாலும் கூட தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்படும் வரையிலும், அறப்போரைத் தொடர்ந்து நடத்துவதற்குத் திட்டமிட்டே விட்டோம் என்றும் உறுதியளித்துள்ளார்கள்.

**தமிழ்ப் பகுதிகள் தாயகத்துடன் இணைக்கப்பட்டுவிட்டால் அதன் பின்னர் திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் அமைப்புக் கலைக்கப்பட்டுவிடும் என்றும், 'காங்கிரஸ்' என்ற பெயரைக்கொண்டிருப்பதால், அது ஒரு குறிப்பிட்ட கட்சிக்காரர்களை மட்டும் கொண்ட இயக்கமல்ல என்பதையும் அறப் போராட்டத் தலைவர்கள் உறுதியளித்ததின் பேரில் 6-8-54-ம் தேதியன்று அடையாள மறியலாக திராவிட முன்னேற்றக் கழகம் அறப்போரில் ஈடுபடும்படி கூறியுள்ளேன்.**

அன்றைய தினம் நாகர்கோவில் நீதிமன்றத்தில் தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் காலையிலிருந்து மாலை வரையிலும் மறியல் நடைபெறும்.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் என். நேசமணி சிறையிலிருந்து விடுதலையடைந்த பின்னர், மேலும் அறப்போரை நடத்துவது குறித்தும் ஆலோசனை செய்யப்படும்,

நாகர்கோவில் திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளர் தோழர் ஜானுக்கு அதற்கான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

**அறப் போராட்டம் எதுவாக இருந்தபோதிலும் சரி, அது மாகாண அரசாங்கத்தை மட்டும் பாதிக்கும் தன்மையில் அல்லாது மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த**

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 2—8—54 திங்கள்

# இந்த மக் ஆர்திகள்!

"மாணவர்களே, நீங்கள் அரசியலில் பங்கு கொள்ளாதீர்கள்!"

"ஆசிரியர்களே, உங்கள் தொழில் பாடம் சொல்லிக் கொடுப்பதுதான்; அதைக் கவனியுங்கள்!"

"தொழிலாளிகளே! நாட்டின் உற்பத்தியைப் பெருக்குவதில் ஈடுபடுங்கள்; அரசியல் சூதாடிகளிடம் மாட்டிக்கொள்ளாதீர்கள்!"

"சர்க்கார் ஊழியர்களே! நீங்கள் அரசியல் எண்ணங்களை கொள்ளக்கூடாது; எக்கட்சி வெற்றிப் பெற்றாலும் உங்களுடைய போக்கு மாறக் கூடாது!"

"வெவ்வேறு தொழில் துறையில் இருக்கும் பெரியோர்களே! உங்களுக்கென்று கொடுக்கப்பட்ட வேலையை செய்யுங்கள்! அரசியலில் நீங்கள் ஈடுபட வேண்டாம்!!"

* * *

இன்று அரசியல் வானிலே அதிகாரத்தோடு வீற்றிருப்பவர்கள் அடிக்கடி கூறும் வார்த்தைகள் இவை. நாட்டிலே மக்கள் விழிப்புணர்ச்சி அடைந்து, அரசியல் தெளிவு பெற்று, பொது நலச் சேவை செய்ய வரவேண்டுமென்றுதான், அறிவுபடைத்த எவரும் விரும்புவர்.

ஆனால் நம்மை ஆளவந்தார்கள் அடிக்கடி கொடுக்கும் இதோபதேசம், "அரசியலைப் பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்; அதை எங்கள் கையில் விட்டு விடுங்கள்!" என்பதுதான்!

நூற்றைம்பது வருட பிரிட்டிஷ் ஆட்சியில் ஆங்கிலேயர் உண்டாக்கி, வளர்த்துவிட்டுப் போனது இந்த நாட்டின் நிர்வாக அமைப்பு!

"அரசியலைப் பற்றி எண்ணாதே! மறுமலர்ச்சியைப் பற்றி பேசாதே! கம்ப ராமாயண விமர்சனம் எழுது; ஆனால் காவியம் கண்ட ஷெல்லியின் கருத்துக்களை பரப்பாதே! பால காண்டத்தின் பெருமையைக் கூறினாலும், பாண்டிச்சேரி சிறை உடைந்த வரலாற்றைப் பற்றி பேசாதே!" என்றெல்லாம் கூறாமல், மொத்தமாக, 'அரசாங்க ஊழியனாக வேண்டுமானால் அரசியலைப் பற்றி எண்ணவும் கூடாது,' என்ற அளவில் சட்டங்களை இயற்றி, உத்தியோக விதிகளை ஏற்படுத்திக்கொண்டிருந்தான், வெள்ளையன்!

நாட்டை அடிமைப்படுத்தி வைத்திருக்க, அறியாமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்கள் தேவை. மக்கள் அறியாமையிலே உழன்று கிடக்க, அவர்கள் அருகே அறிவொளி செல்லக்கூடாது. இந்த உண்மையை நன்கு அறிந்த பிரிட்டிஷார், தங்கள் ஆட்சி நிலைத்து, நீடித்து நடைபெற, இந்திய உபகண்டத்திலேயே புதியதொரு ஜாதியை உண்டாக்கினர். அவர்கள்தான் சர்க்கார் ஊழியர்கள்!

சிப்பாய் கலகம் முடிந்து சென்ற முதல் உலகப் போர் நடந்த காலம் வரை, ஆபீஸ் பைல்களைத் தவிர உலகத்தைப் பற்றியே கவலைப்படாத புதியதொரு மனித வர்க்கத்தை சிருஷ்டி செய்தனர்!

ஆனால் மகாயுத்தத்திற்கு பிறகு, 'வாங்கிய சகாப்தம்' ஆரம்பித்தது!

உலகப் போரின் காரணமாக மக்களும் ஓரளவு அரசியல் உணர்ச்சி பெற்றனர்!

இந்த புத்துணர்ச்சியிலே சர்க்கார் ஊழியர்களும் ஒரு பகுதிதான்! புரட்சிப் புயல் வீசும்பொழுது, யார்தான் தப்பிக்க முடியும்?

அதிகாரத்தை நிச்சயம் படித்த எண்ணிய வெள்ளை அரசாங்கம், நாட்டில் சுதந்திரப் போராட்டம் நடத்திய அரசியல்வாதிகளையும், அவர்களுக்குத் துணைபுரிந்த பல்வேறு துறையில் உள்ளவர்களையும் அடக்கி ஆளவேண்டியிருந்தது. இதற்கு மிகக் கட்டுக்கோப்பான அரசாங்க ஊழியர்கள் தேவை, பிரிட்டிஷாருக்கு!

அந்தத் தேவையின் காரணமாகத்தான், மத்திய, ராஜ்ய சர்க்கார் ஊழியர்களின் பேச்சு எழுத்து, எண்ண உரிமைகளை அடியோடு கட்டுப்படுத்தியதோடு, மிகக் கொடுமையான முறையில் அரசியல் வாசனைப் பட்ட அரசாங்க ஊழியர்களைக் கூட, தண்டித்தது!

இந்த அடிமையிலும் அடிமையான வாழ்க்கையைப் பற்றி சிந்திக்கக்கூட நேரமின்றி சில ஊழியர்கள், வறுமையெனும் பெருமாதோடு போட்டிப் போட்டுக் கொண்டிருந்தனர். இதனை உணர்ந்தவர்களோ மனம் புழுங்கி, 'ஒரு நாள் வரும்; அன்று ஆதிக்கக்காரன் ஒழிவான்! அன்றும், அறிவுக் கொண்ட ஆட்சி மலரும்!!' என்று காத்துக் கொண்டிருந்தனர்.

அந்த நாள் வந்தது.

ஆகஸ்டு 15-ம் தேதி 1947-அன்று! ஆனால்......?

அந்நிய ஆட்சி ஒழிந்தது என்ற அளவில் முன்னேற்றமே தவிர, வெள்ளையனுக்குப் பின் அரியாசனம் ஏறியவர்கள் அவனைவிட, ஆதிக்க எண்ணம் படைத்தவர்களாகி விட்டனர்.

வெள்ளையனுக்கு இருந்த ஒரு பெருமை, அவனுக்குப் பின்னால் மிக உயர்ந்த 'கலாச்சாரம்' இருந்தது. அடக்குமுறைகளை அள்ளி வீசிய போதிலும், வெள்ளையன் கூடவே ஆங்கில மொழியும், அதன் மூலம் ஐரோப்பிய மறுமலர்ச்சி எண்ணமும் வந்தது. அந்த ஆங்கிலம் மூலம் தான் நாம் விடுதலை உணர்ச்சி பெற்றோமே ஒழிய, வேதத்தையும், வியாசரையும் படித்து ஜனநாயகப் பண்பை தெரிந்து கொள்ளவில்லை!

ஆனால், இன்று நம்மை ஆளவந்தார்கள் செய்யும் ஆதிக்க செயல்கள் மிகவும் கேடான வருங்காலத்தை உற்பத்தி செய்யும்.

இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை சர்க்கார், அரசாங்க சிவில் ஊழியர்களுக்கு புதிய சட்டமொன்றை போட்டிருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

"சர்க்காரை கவிழ்க்கும் நடவடிக்கைகளில் ஒரு சர்க்கார் ஊழியர் ஈடுபட்டிருந்தாலோ, அப்படிச் சந்தேகிக்கக் காரணமிருந்தாலோ, அத்தகைய சேவையில் ஈடுபட்டிருப்பவர்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்பட்டாலோ, அவரை சேவையிலிருந்து கட்டாயமாக நீக்க, கவர்னர் உத்திரவிடலாம்."

இத்தகையதொரு சட்டம் ஆங்கில அரசாங்கத்திலே இல்லை, யுத்த காலத்தைத் தவிர!

பேச்சு, எழுத்து, எண்ண சுதந்திரம் அளிக்கும் இந்த சுயராட்சிய சர்க்காரில் இத்தகைய ஓர் சட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது!

நாட்டிலே சர்க்காரைக் கவிழ்க்க எண்ணி, பலாத்காரத்திலே ஈடுபடுபவர்களை, அமைதி நோக்கம் கொண்டு தடுப்பதை, ஜனநாயகவாதிகள் மறுக்கமாட்டார்கள்!

ஆனால், இந்தத் துறையில் ஏற்கனவே பல சட்டங்கள் இருக்கும்பொழுது, இந்தப் புதிய சட்டம் எதற்காக?

சர்க்காரை கவிழ்க்கும் காரியங்கள் எவையெவை?

அப்படிக் கவிழ்க்கும் காரியங்களில் ஈடுபட்டதாக நிரூபிக்காமல் ஊழியர்களை தண்டிப்பது சரியா?

அத்தகைய நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பவர்களுடன் பழகாதே—என்று கூறுவது மனிதாபிமானத்திற்கு சரியா?

இவைகளுக்கு சர்க்காரின் விளக்கம் என்னவென்று கூறப்படவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நிச்சயம் தெரிகிறது—சுதந்திர ஆட்சியில் சர்க்கார் ஊழியன் இன்னும் இருட்டறையிலே தள்ளப்படுகிறான்!

"கம்யூனிஸ்டுக்கு, 'டீ' வாங்கி கொடுத்தாயே!" என்று கூறி, அமெரிக்காவில் கொடுமைப்படுத்தி வரும் மக் ஆர்தியின் ஆவி இங்கும் உலவுகிறது என்பது தெரிகிறது.

"ஜாதியை ஒழி!" என்று தவறி சர்க்கார் ஊழியன் கூறினால்கூட, அவனை சுலபமாக இந்தச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டி, வேலையிலிருந்து நீக்கி விடலாம்.

இப்படிச் செய்வதால், அரசாங்க நிர்வாக அமைப்பின் பூராவும் ஊமைத்துரைகள், மாமன்களாக வைத்துக் கொண்டு சொகுசான ராஜ தர்பார் நடத்தலாம்!

இப்படியெல்லாம் மனப்பால் குடிக்கும் ஆதிக்கவெறி தான் இந்தப் புதிய சட்டத்திற்குக் காரணம்!

உண்மையிலேயே முன்னேற்ற சர்க்காராக இருந்தால்—அரசாங்க ஊழியர்கள் சரியாக தங்கள் வேலையைச் செய்கின்றனரா; அவர்களுடைய மற்ற நடவடிக்கைகள் அரசாங்க அலுவல்களைப் பாதிக்காமலிருக்கிறதா—என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, ஆண்டான் மாதிரி தங்கள் கையிலிருந்து பணம் கொடுப்பதுபோல், சர்க்கார் ஊழியர்களின் மூன்று சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவது, நிச்சயமாக, பிற்போக்கு வாதிகளின் செயலேயாகும்.

சுதந்திரம் வந்த பிறகு இந்தமாதிரி சட்ட சீர்திருத்தத்தைச் செய்திருக்க வேண்டும் நேரு சர்க்கார்; ஆனால், அதற்கு எதிராக தங்கள் நிலையை சாஸ்வதமாக எண்ணி, இன்னும் கெடுபிடியான சட்டங்களைப் போட்டு வருகின்றனர்.

ஆங்கிலேயன், இந்தியாவை விட்டு வெளியேறி, கென்யாவில் போய் இந்தக் காரியத்தைச் செய்கிறான்!

இங்கே, அவன் விட்டுப் போனவர்கள் செய்கின்றனர்!

இதுதான் வித்தியாசம்!

மக் ஆர்திகள் எல்லா நாட்டிலும் இருக்கின்றனர். அவர்கள் ஒழிக்கப்படாத வரை உலகம் முன்னேற வழி இல்லை!

# பாரம் அதிகம் போடாதே!

திரு. இராசகோபாலாச்சாரியார் எப்படியோ தற்காலிகமாகவாவது அரசியலிலிருந்து ஓய்வு பெற்றிருக்கிறார். அவர் இனி தனது காலம் முழுவதையும் கடவுளின் காரியங்களைக் கவனிப்பதில் செலவிடலாம் இந்தியாவில், அவர், கடவுளின் பிரதம 'ஏஜெண்டா'கவும், அதிகாரியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

சங்கராச்சாரியார்கள், மகான்கள், மகரிஷிகள், ஜீயர்கள், பரமஹம்சர்கள் எல்லாம், பின்னணியில் ஓடி ஒதுங்கிவிட்டார்கள். அவர்களுக்கு எல்லாம். சி. ஆர். பெற்றிருக்கிற பத்திரிகை பலம் இல்லையே! இந்த பத்திரிகை பலம்தானே, மதச்சார்பற்ற அல்லது சார்புடைய மந்திரிசபைகளை ஆக்குவதும் அழிப்பதும்!

கடவுள் என்ற தந்திரமானவார்த்தையை உச்சாடனம் செய்வதைத் தவிர வேறு எதற்கும் சி. ஆர். இப்போதெல்லாம் வாயைத் திறப்பதே இல்லை. அவர் எப்பொழுதும் சர்வ வல்லவனுக்கும் பிரியமானவராகவோ, அன்றி, பகுத்தறிவிற்கு எப்பொழுதும் புறம்பானவராகவோ இருந்ததில்லை.

சில வருடங்களுக்குமுன் வெள்ளையரை எதிர்த்துப் போரிட்ட, காங்கிரஸ் படையிலிருந்த, பல்கலைக் கழகங்களிலிருந்துவந்த நாத்திக இளைஞர்கள் சிலர் இவரிடம் பணி புரிந்தனர்.

முன்னாளில் இவர், எல்லோரும் சுயமாக சிந்திப்பதை வரவேற்றார். அவரே ஒரு சுய சிந்தனைவாதி என்று கூறிக்கொண்டார். ஆனால் காலம் இப்போது மாறிவிட்டது. சி. ஆர். வயோதிகராகிவிட்டார்.

அவரது புகழிலும், வயதிலும் தான் அவரது எஞ்சிய வாழ்வு நிறைகிறது. வயோதிகம் மனிதனின் சிந்தனையிலே குறிப்பிட்ட மாறுபாடுகளை உண்டுபண்ணும் எனச் சொல்வார்கள்.

ராஜாஜி "கடவுள் இருக்கிறார் என்று சொல்லுகிறார், சில தொற்று நோய் போன்றவர்கள் கடவுளே இல்லை என்று சொல்கின்றனர்; பன்னெடுங்காலமாய் தொன்றுதொட்டு நமக்குத் தரப்பட்டிருக்கிற நாகரீகம் பண்பாடு இயற்கை வேரோடு அழித்துவிட அவர்கள் முயற்சிக்கிறார்கள்; சுதந்திர இந்தியாவின் அழிவையே அவர்கள் லட்சியமாகக் கொண்டுள்ளனர்," என்று கூறுகிறார்.

தன் வாழ்வின் ஒவ்வொரு விநாடியும், சி. ஆ—ரால் காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் இருக்கிற இந்தக் கடவுளின் மதிப்புத் தான் என்ன?

விஞ்ஞான வளர்ச்சியால் கடவுள் அழிக்கப்பட்டால இந்தியாவின் சுதந்திரத்திற்குமா ஆபத்து வரும்?

பிரகஸ்பதி, சார்வாகா, கபிலர் போன்ற நாத்திகர்களால்தான் இந்திய நாகரீகம் உயிர் பெற்றது.

வால்டேர், பெயின், இங்கர்சால், ப்ராட்லா, பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் போன்ற பகுத்தறிவு வாதிகள் இன்னமும் உலகத்தின் அறிவியலை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

சி. ஆ.—ரின் கடவுள் வாதங்களைக் கேட்குமுன்பே பெரும் புகழடைந்து விட்ட அந்தத் தொற்று நோயாளிகள் எல்லாம், சி. ஆர். பிறப்பதற்கு முன்பே பிறந்தவர்கள். இன்று சி. ஆர். போன்றவர்கள், தங்களின் 'கடவுள் பிரச்சாரத்தால்' திருட்டுத்தனமாக அழிக்க முயலும்; இந்த மனித சமுதாயத்தின் மிகப்பெரும் நாகரீக மேம்பாட்டிற்காக, இந்த 'தொற்று நோயாளி'கள் எல்லாம், மிகப் பொறுமையாகக் கஷ்டப்பட்டிருக்கின்றனர்

யார் தொற்று நோயாளிகள்? விஞ்ஞான அறிவைப் பரப்பும் மனிதர்களா 'தொற்று நோயாளி'களா? அல்லது "மக்களே! மழை பொழிய மகேசனைப் பஜியுங்கள்" என்று மக்களின் மூடத்தனத்தை தூண்டி வளர்த்து, அவர்களின் அறியாமையை தனது அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திக் கொள்பவர்கள் தொற்று நோயாளிகளா?

சென்ற ஆண்டு, விவசாயிகளின் துயர் துடைக்க, மழை பொழிய வேண்டுமென, மகேசனுக்குப் பிரார்த்தனை செய்தார். பிரார்த்தனைகளுக்கு என்ன பலன் கிடைத்தது? கோரப் புயல், தஞ்சை-திருச்சி மாவட்டங்களைக் கொள்ளையிட்டது; கொலைகள் பல புரிந்தது; ஆண், பெண், குழந்தைகள் பலரைக் கொன்றது; பயிர்களை கால்நடைகளை நாசமாக்கிற்று; எண்ணற்றோரை, ஆயிரக்கணக்கானவரை, வீடற்றவ

(4-ம் பக்கம் பார்க்க)

# கழகச் செய்திகள்

## சென்னை 6-வது வட்ட தி. மு. கழகம்

25—7—54 காலை 10 மணிக்கு பொது உறுப்பினர் கூட்டம் சென்னை மாவட்ட செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்:—

செயலாளர்: தே. சே. சானகிராம், துணைச் செயலாளர்: என். சி சிட்டிபாபு, பொருளாளர்: பெ. து. மோகனசுந்தரம், மாவட்டப் பிரதிநிதிகள்: தே. சே. சானகிராம், என். இராஜாராம்.

## சென்னை 10-வது வட்ட தி. மு. கழகம்

25—7—54 காலை 10 மணிக்கு தோழர் ஏ. ஆர். ரேஷாசலம் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் கமிட்டியில் இருந்த தோழர் விஸ்வநாதன் விலகிய கடிதத்தை ஏற்றுக் கொண்டு தோழர் அழகரசு அவர்களை கமிட்டி உறுப்பினராக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

## பம்பாய் தி. மு. கழகம்

18—7—54 இரவு 8 மணிக்கு உறுப்பினர்கள் கூட்டம், தோழர் என். தியாகராசன் தலைமையில், நடைபெற்றது. செயற்குழு உறுப்பினராக தோழர் பி. எஸ். செல்வராஜ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பம்பாய்-மாதுங்கா தி. மு. கழகம்

25—7—54-ல், தோழர் ஜே ஜோதி நாயகம் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கடந்த கூட்ட நடவடிக்கைகள், மடல் போக்கு வரத்து, வரவு செலவு கணக்குகள் சரி பார்த்து ஒப்புக்கொள்ளப்பட்டன. செயற்குழு உறுப்பினர் தோழர் ந. மன்னூர் விலகல் முடங்கல் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன் அடுத்த கூட்டத்தில் வேறு உறுப்பினர் தேர்ந்தெடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அநுதாபத் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

## பம்பாய்—கொலாபா தி. மு. கழகம்

9—7—54ல், தோழர் வேணு கோபால் தலைமையில் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, வரவு — செலவு கணக்குகள் சரிபார்க்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது.

## பெங்களூர் — அக்கிபேட்டை தி. மு. க.

25—7—54 மாலை 3 மணிக்கு கழக மனையில் தோழர் இளஞ்சேரன் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது தோழர் ஆர். களப்பன் விலகுதலை ஏற்றுக்கொண்டதுடன், செப்டம்பர் மாதம் இரண்டாவது வாரத்தில் கழக நூல் நிலைய வளர்ச்சிக்காக சிறப்பு சொற்பொழிவுகள் நடத்த முடிவு செய்யப்பட்டது.

## வனவாசி தி. மு கழகம்

20—7—54-ல், தி. மு கழக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ப. சண்முகம் தலைமையில் நடைபெற்றபோது, வரவு—செலவு கணக்குகளை ஒப்புக்கொண்டு மாவட்ட பிரதிநிதி தோழர் ஓ சிற்றம்பலம் ராஜீ குமாரவை ஒப்புக் கொண்டு தோழர் ப. பெரியசாமி அவர்களை மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

## வேலூர் (சேலம்) தி. மு. கழகம்

20—7—54-ல், தோழர் வி ஏ. இராமநாதன், தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மேட்டூர் அணை தி. மு. க.

12—7—54ல் தோழர் எம் தயாளதாஸ் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்; இ. ஆ. சின்னுசாமி; துணைச் செயலாளர்: அ. மாது; பொருளாளர்: த. ரா. அழகிரிசாமி; மாவட்ட உறுப்பினர்: சி க சுமணி; 13 தோழர்கள் கமிட்டி உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## நாகை தி. மு. கழகம்

11—7—54 ஞாயிறு இரவு 9 மணிக்கு நாகை தி. மு. கழகக் கட்டிடத்தில் கழகச் செயற்குழு துணைச் செயலாளர் கல்யாணம் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம், கல்லக்குடி அறப்போர் வீரர் குமாரவேல் மறைவுக்கு அநுதாபம் தெரிவித்தும், வரவு - செலவு கணக்கை ஒப்புக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மற்றும் நாகை மின்சாரக் கம்பெனியார் அதிகக் கட்டணம் வசூலிப்பதைக் கண்டித்தும், பிரெஞ்சிந்திய அறப் போரில் கலந்துகொள்ளும் தி மு. கழகத் தோழர்களைப் பாராட்டியும், கழகத் தோழர்கள் 'தினத் தந்தி' பத்திரிகையை வாங்கவேண்டாம் என்று கேட்டுக் கொண்டும் தீர்மானங்கள் நிறைவேறின. பகுத்தறிவுப் படிப்பகமும், தி. மு க. வினையும் அந்த இதழை வாங்குவதில்லை என்று முடிவு செய்திருக்கின்றன.

## வாளவாடி தி. மு. கழகம்

11—7—54ம் அன்று வாளவாடி தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெற்றது. அதுசமயம் புத்தாண்டிற்கு செயலாளராக க. ஆறுமுகம்; துணைச் செயலாளர்: வே. தண்டபாணி; பொருளாளர்; இராசன்; மாவட்ட பிரதிநிதி: அ. கண்ணன்; மற்றும் 12 பேர் கொண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

## தேனி தி. மு. கழகம்

14—7—54 மாலை 3 மணிக்கு கழக கட்டிடத்தில் செயற்குழு கூடியது. கல்லக்குடி அறப்போரில் ஈடுபட்ட கல்லக்குடி குமரவேல் மறைவிற்கு அநுதாபம் தெரிவித்தும், மாவட்ட தேர்தலில் புகுத்தவிருக்கும் வாக்களிப்பு முறையைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேறியது.

## பொள்ளாச்சி வட்ட தி. மு. கழகக் கிளை

18—7—54-ல், பொள்ளாச்சி வட்டக் கிளையின் புதிய அமைப்புக் கூட்டம் தோழர் அ. ச. பாலு தலைமையில் நடைபெற்று புதிய செயற் குழுவில் தாலுகாவில் உள்ள கிராம நகர கிளைகளின் செயலாளர்களை செயற் குழு உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளவும், கிராம பகுதிகளில் புதிய கழகங்களைத் தோற்றுவிக்க தோழர்கள் க அரைக்கண்ணன், சேரன், மா. பொன்மலை, ஏ. எஸ். கண்ணன், பி எஸ். மதிவாணன், ஏ. எஸ். ஏ. சாமி, கையண்ணன் ஆகியவர்களை அமைப்பாளர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

## கவண்டம்பட்டியில் தி. மு. கழக துவக்கம்

9—7—54 மாலை 5 மணிக்கு கழகத் துவக்க விழாக் கூட்டம் தோழர் க. முத்து தலைமையில் நடைபெற்றது. தோழர் எம். என். மணி கொடியேற்றி வைத்தார் தோழர்கள் எம். என் மணி, என். செழியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

## ரெகுநாதபுரத்தில் தி. மு. க. துவக்க விழா

4—7—54 மாலை 4 மணிக்கு கண்டியூர் வாரட்சி மன்ற தலைவர் எம. அலாவுதீன் தலைமையில் தி மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் ஏ. வி. பதி கழகத்தைத் திறந்துவைத்தார். தஞ்சை தாமரைச் செல்வன் கொடியேற்றி வைத்தார் தோழர் ராமச்சந்திரனும் மற்றும் பல தோழர்களும் சொற்பொழிவாற்றினர். பின்னர் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—செயலாளர்: க. துரையப்பன்; துணைச் செயலாளர்: ரா. சம்பந்த மூர்த்தி; செயற்குழு உறுப்பினர்கள்: ப. ஆ. கலியபெருமாள், சுந்தரேசன்.

## நீர்முள்ளிக்குட்டை தி. மு. க. துவக்க கூட்டம்

24—7—54 மாலை 6½ மணிக்கு கழகச் சார்பில் கந்தசாமி கோவில் தெருவில் தோழர் என். கே. வெங்கடாசலம் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எம். பி. சுப்பிரமணியம் எம். எல். ஏ, கழகத்தைத் திறந்துவைத்தார். தோழர் பி கந்தசாமி எம். எல் ஏ. கொடியேற்றி வைத்தார். தோழர்கள் இ. ஆர். கிருஷ்ணன் ஏ சேரலாதன ஆகியோர் பேசினர்.

## அருப்புக்கோட்டையில் தி. மு. க. பொதுக்கூட்டம்

25—7—54 இரவு 7 மணிக்கு வெள்ளைக்கோட்டை தெற்குரத வீதியில், தோழர் சிவசண்முக சுந்தரன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் "அரசியல் அனுதைகளும் 55 ஓட்டுகளும்" என்பது பற்றி தோழர்கள் மதுரை எஸ். முத்து, எம். எஸ். ராமசாமி, சு காளிமுத்து, பி பி. நல்லதம்பி பிச்சைமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

## தி. மு. க. பொதுக்கூட்டம்

கீழப்பழுவூர், ஜூலை 11—

இவ்வூர் தி. மு க. சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது கூட்டத்திற்கு கி. நாகராசன் தலைமை தாங்கினர். தோழர்கள் டி கே. திராவிடமணி, கிட்டப்பா, அ தம்புசாமி ஆகியோர் தி. மு. க. கொள்கைகளையும், காங்கிரஸ் ஆட்சியின் நிலையையும் விளக்கி பேசினர். இறுதியாக ம. பொன்னம்பலம் கடவுள்கள் நிலையையும் அவைகள் செய்த நன்மைகள் என்ன என்பதை விளக்கு முறையிலே பேசி திராவிட நாடு பிரிவினையின் முக்கியத்தையும், விளக்கினர். தலைவர் முடிவுரை கூற ம. ராசு நன்றி கூற கூட்டம் இனிது முடிந்தது.

## வெரியகுப்பம் தி. மு. க.

25—7—54ல் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: பி. நாராயணன்; துணைச்செயலாளர்: ஆர் பெருமாள்; பொருள் வைப்பாளர்: சி, வடிவேலு; தொண்டர் படைத் தலைவர்: டி பி பாலகிருஷ்ணன்; செயற்குழு உறுப்பினர்கள்: ஜி. சுந்திரரசன், எம் குப்பன், கே. சிராமுலு, சி வி முத்தியாலு, டி. கே. கிருஷ்ணமூர்த்தி, டி. ஜீவன், வ. பலராமன், கே. எஸ். கிருஷ்ணன்.

# கவர்னர் சம்பளப் பிரச்னை: கண்ணியர்கள் கருத்துரை

கவர்னருக்கு இப்போது தரப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் சம்பளம் சரிதானு? அதைக் குறைக்கப் போராட்டம் நடத்த வேண்டுமென்று தி. மு. கழகம் பொதுச் செயலாளர் கூறியது தவறு? என்பது பற்றி வாசகர்களை 'கருத்துரை அளியுங்கள்' என்று கேட்டிருந்தோம். கருத்துரைகள் கொண்ட கடிதங்கள் குவிந்த வண்ணமுள்ளன! அவைகளில் சில முன்னர் வெளியிட்டிருந்தோம். தொடர்ந்து இன்றும் வெளியிடுகிறோம்!

★

ஆசிரியர் அவர்களுக்கு.

நம் நாடு ஒரு ஏழை நாடு. குறிப்பாக தமிழகம் அதின் தன்மை வகிக்கிறதாக உள்ளது. இந்நாட்டின் கவர்னர் அடைந்து வரும் சம்பளம், இந்நாட்டின் வருமானத்திலே பெரும் பகுதியைப் பிடித்துக் கொள்வது எனில், எந்த மனிதராலும் சகிக்க முடியாத கொடுஞ் செயல் என்றே கூறலாம். சுமார் 10 லட்சம் வருடமொன்றுக்கு தமிழகம் கவர்னருக்குஅளித்து,கவர்னரால் என்ன தமிழகத்துக்கு நன்மை பயப்பதாக உள்ளது? ஆகவே, தாங்கள் கொண்டுள்ள கருத்துப்படி நியாயமான கோரிக்கையை ஏற்று கவர்னர் தம் சம்பளத்தைக் குறைத்து நம்மை மகிழச் செய்வாரெனில், நாம் மகிழ்வோம். நமது எண்ணத்தை நாம் கூடிய விரைவில் தெரிவிப்பது மிகவும் அவசியமானவைகளில் முதன்மை என்றே கருதுகிறேன்.

மு. முஹம்மது ஹமீதின்
சென்னை-2

★

ஐயா,

மக்களின் பிரச்சினைகளைக் கவனிக்கப் பணம் இல்லையென்று சொல்லும் சர்க்கார் தனிப்பட்ட ஒரு மனிதரான கவர்னருக்கு ஆண்டுதோறும் லட்சக் கணக்கான ரூபாய்களை சம்பளமாகக் கொடுப்பதைக் குறைக்கவேண்டியதே, அதற்காக ஒரு போராட்டமும் தேவை, விரைவில்.

மா. பொன்மலை,
பொள்ளாச்சி.

★

ஐயா,

நம் நாட்டில் (தமிழ் நாட்டில்) பெரும்பாலும் வறுமையே நிலவி வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டங்கள் பெருகி வருகிறது வேலையில்லாத் திண்டாட்டங்கள் பெருகி வருகிறது வரிக்கட்டுவோர் வதங்குகின்றனர். இந்த நிலையில் வரைப் பிழிந்து எடுக்கப்பட்ட பணத்தை ஒருவரிடம் சம்பளமாகக் கொடுப்பதென்றால் அது அன்புமுறைக்கு மாறுபட்ட குடியரசாகும் பலர் வாட, ஒருவர் சுகமாக வாழ்வது நாட்டுக்கு செய்யும் துரோகமாகும். கட்டாயம் கவர்னரின் சம்பளத்தைக் குறைக்க வேண்டும்.

கே. ஏ சாமி,
ரா. குட்டி,
மு வீராசாமி,
வண்ணை.

★

ஆசிரியருக்கு,

இந்த நாட்டு பொருளாதாரத் துறையில் ஒருவருக்கு வருடம் ரூ. 10 லட்சம் தேவையில்லை. காங்கிரஸ் கவர்னர் என்றும்—உதை உத்தமர் காந்தியாரின் சீடர்கள் என்றும்—ரூ. 500-க்கு மேல் வாங்குவது பொருந்தாது. மாதம் ஒன்றுக்கு 80 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு தனி நபரை கவர்னர் பிரகாசா அவர்கள் திரும்பிப் பார்க்கவேண்டும். எல்லோரும் இந்நாட்டு மக்கள் என்று கூறிய காங்கிரஸ் ஒரு தனி நபருக்கு ரூ. 10 லட்சம் கொடுப்பதை மனித உள்ளம் படைத்தவர்கள் யாரும் எதிர்க்கத்தான் செய்வார்கள்.

அண்ணாவின் அறிக்கைபடி ஆறு மாத காலத்தில் சம்பளத்தைக் குறைத்தால் பிரகாசாவுக்கு நல்ல பெருமை கிட்டும். இல்லையானல் போராட்டம் நடத்தவேண்டும்.

எம். ஆர். நாதன்,
சென்னை.

★

அன்புள்ள ஆசிரியருக்கு,

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம், உது நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்" என்ற முழக்கம் எல்லோருடைய இதயத்திலேயும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. வடநாடு ஆதிக்கத்தின் கீழ் நம் நாடு வதைகிறது. அதைப் போக்குவார் யாருமில்லை. வடநாடு சுரண்டிக் கொண்டே இருக்கிறது. நம் நாட்டுச் செல்வம் வறண்டுக் கொண்டே போகிறது. வடநாட்டிலே இன்பம் பெருகிக் கொண்டே இருக்கிறது. இங்கே துன்பம் வளர்ந்துகொண்டே இருக்கிறது. இதற்கு என்ன காரணம்? நம் நாட்டை ஆளுகின்ற உரிமை நேருவின் கையில், கவர்னர் பிரகாசா வட நாட்டினர், அவருக்கு ஆண்டிற்கு ரூ 9,93,000 சம்பளம் என்ற பெயரில் வடநாட்டிற்கு சென்றுக் கொண்டிருக்கிறது. அதை குறைக்க போராட்டம் தேவை.

நா. ந. சொக்கன்
திருவள்ளூர்.

★

ஆசிரியர் அவர்களுக்கு.

கவர்னர் சம்பளம் குறைக்கப்பட வேண்டும். அண்ணா கூறுகிறபடி இதற்கு ஓர் புரட்சி தேவை.

கோவிந்தசாமி
சென்னை

## மதுரையில் காமராசர் பிறந்தநாள் விழா

திரு. இ ராம. இருளப்பக் கோனார் நிலைவுப் படிப்பகத்தில், 15—7—54ல், கொண்டாடப்பட்டது. 500-க்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு இனிப்பும், 1000-த்திற்கு மேற்பட்ட ஏழை மக்களுக்கு கஞ்சியும் வார்க்கப்பட்டது.

## அழகிரி சொற்பயிற்சி மன்றம்

11—7—54 மாலை 6 மணிக்கு நாகை தி மு கழக கட்டிடத்தில், அழகிரி சொற்பயிற்சி மன்ற சார்பில் தோழர் பாண்டியன் தலைமையில் 'மது மலர்ச்சி' எனும் தலைப்பில் சொற்பயிற்சி வகுப்பு நடைபெற்றது. தோழர்கள் கல்யாணம், சதாசிவம், ஜோசப், கோவிந்தராசு பயிற்சியில் பங்கு கொண்டனர்.

## பாராட்டு விழா

11—7—54-ல், சென்னை பெரம்பூர் பேரக்ஸ் ராமானுஜ நார்டன் தெரு, என். 32, மூதியோர் பாடசாலையில் சென்னை நகர சபை மேயர் ஆர். முனுசாமி பிள்ளைக்கு ஒரு பாராட்டு கூட்டம் நடைபெற்றபோது, வரவேற்புப் பத்திரம் வாசித்தளிக்கப்பட்டதுடன் தோழர்கள் பலர் பாராட்டுரை வழங்கினர், முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சுய ஆட்சி கோரிக்கை

அகில இந்திய இந்துமகா சபைத் தலைவர் சட்டர்ஜி, ஜம்முவுக்கு மாநில சுயாட்சி உரிமை வேண்டுமெனவும், காஷ்மீர் நிர்வாகத்தில், ஜம்மு பிரஜா பரிஷத்துக்கு நியாயமான பங்கு கிடைக்கவில்லை எனவும் குறிப்பிட்டார்.

# டுனீஷியாவில் சுயாட்சி பிரகடனம்

## மெண்டஸ் பிரான்ஸ் முயற்சி

### பிரான்சின் காலனி ஆதிக்கம் தேய்கிறது

பாரிஸ், ஆக. 1—

பிரெஞ்சு அரசாங்கம் டுனீஷியாவுக்கு சுய ஆட்சி வழங்குவதென்று முடிவு செய்திருக்கிறது. பிரெஞ்சு மந்திரி சபையில் இதற்கு எதிர்ப்பு இருந்தும், மெண்டஸ் பிரான்ஸ் தன் கோரிக்கையில் வெற்றி பெற்றிருக்கிறார். இதன்படி டுனீஷிய மக்களை மட்டுமே கொண்ட அரசாங்கம் டுனீஷியாவில் அமைக்கப்படும்.

டுனீஷிய மக்களை மட்டுமே கொண்ட பாராளுமன்றத்தை அமைப்பதற்கு பொதுத் தேர்தல் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோ-சீனாவில் சமாதானம் ஏற்பட உழைத்த மெண்டஸ் பிரான்ஸ், டுனீஷியா பற்றி பிரெஞ்சு அரசாங்கத்தின் முடிவை டுனீஷிய மன்னர் சிடி முகம்மது அல் அமீனிடம் நேரில் தெரிவிக்க சென்றிருக்கிறார்.

இச் சீர்திருத்தங்கள் மூலம் உள்நாட்டு விவகாரங்களில் முழு அதிகாரமும் டுனீஷிய மக்கள் கையிலேயே இருக்கும். ஆனால் கடந்த காலங்களில் இருந்ததுபோலவே பிரெஞ்சு மக்களும் அவர்கள் சந்ததியினரும் வாழ்க்கை நடத்த இயலவேண்டும்.

48,195 சதுர மைல் பரப்புள்ள டுனீஷியாவில் வாழும் 1,65,000 பிரெஞ்சுக்காரர்களுக்கென்று தனி பிரதிநிதித்துவ சபை ஒன்று ஏற்படும். இச்சபை டுனீஷியாவில் உள்ள பிரெஞ்சு ரெஸிடெண்ட்—ஜெனரலுக்கு நேரடியாகப் பொறுப்புள்ளது.

நாட்டின் நிர்வாகத்திற்கும் இச் சபைக்கும் தொடர்பேதும் இருக்காது.

நகர சபைத் தேர்தல்களில் பிரெஞ்சுக்காரர்கள் கலந்து கொண்டு அபேட்சகர்களை நிறுத்துவார்கள் என்று தெரிகிறது.

இந்த சுயாட்சியின் மூலம் டுனீஷிய விடுதலைப் படையினரின் கோரிக்கையில் ஒரு பகுதி நிறைவேறியுள்ளது எனலாம்.

## இந்தோ-சீனப் போர் நிறுத்தம்

### பூர்வாங்க ஏற்பாடுகள்!

புதுடில்லி, ஆக. 1—

இந்தோ-சீனப் போர் நிறுத்தத்தை மேற்பார்க்க நியமிக்கப்பட்ட சர்வதேசக் குழு, இந்தோ சீனாவில், தனக்குத் தேவையான போக்குவரத்து, தங்கும் வசதிகள், செய்திப் போக்குவரத்து, சிப்பந்திகள் ஆகியோர் பற்றி அறிந்து கொள்ள, ஒரு பூர்வாங்க விசாரணைக் குழுவை இந்தோ-சீனாவுக்கு முன்கூட்டியே அனுப்ப முடிவு செய்துள்ளது.

இந்தியாவைத் தலைவராகக் கொண்ட அந்தக் குழுவில் போலந்து, கனடா ஆகிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

குழு இந்தோ-சீனாவில் வேலை செய்யத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யும்பொருட்டு முன்கூட்டியே பூர்வாங்கக் குழு இந்தோ-சீனா செல்லும். வியட்மின் உள்பட, நான்கு ராஜ்ய அரசாங்கத்தினரையும் அது பேசும் எனத் தெரிகிறது.

இந்த சர்வதேச போர் நிறுத்த மேற்பார்வைக் குழுவின் முதல் கூட்டம் பண்டித நேருவின் தலைமையில் மூன்று மணி நேரம் சுமுகமாக நடைபெற்றது.

## "ஆரிய மொழிகள் மீது தமிழ் ஆதிக்கம் செலுத்தியுள்ளது!"

### "அன்னிய மொழிகளில் தமிழ்ச் சொற்கள் பல உண்டு!"

"தமிழ் மொழிக்குச் சிறப்பெல்லாம் அது ஒரு தொன்மை வாய்ந்தது என்பதினாலோ அல்லது தமிழில் செறிவு நிறைந்த சொற்செல்வம் இருப்பதாலோ மட்டுமல்ல; தமிழுக்குச் சிறப்பெல்லாம் அதில் உள்ள மிகச் சிறந்த இலக்கியங்களைப் பொறுத்துத்தான்.

மொழிகள் பல நூற்றாண்டுகளாக உயிருடன் உலவலாம். பிறமொழியிலிருந்து சொற்களைக் கடன்வாங்கி வளரவும் கூடும்; ஆனாலும், அவை இன்னமும், எண்ணங்களை வெளியிட, வளர்ச்சி பெறாத கருவிகளாகவே இருக்கலாம்.

மொழி வளர்ச்சி, எண்ணங்களின் வளர்ச்சி, சொல்வள வளர்ச்சி இந்த மூன்று அம்சங்களிலும் தமிழ் மொழியில் சமஸ்கிருதம் பெற்றுள்ள ஆக்கத்தைப் பற்றிப் பேசுபவர்கள், சமஸ்கிருதத்தில் தமிழ் இந்த அம்சங்களில் எத்தனை ஆக்கம் பெற்றிருக்கிறது என்பதை வலியுறுத்தாவிட்டாலும், எடுத்துக்கூடக் காட்டுவதில்லை.

உண்மையில் இந்த மூன்று அம்சங்களிலும், தமிழ் மொழியைப் பூரணமாகக் கற்றிருந்தாலன்றி சமஸ்கிருத மொழியிலும், அதைச் சார்ந்த மொழிகளிலும் இந்த அம்சங்களை, நுணுக்கமாகவும் பூரணமாகவும் கற்பது இயலாததாகும்.

வேத சமஸ்கிருத மொழியில் திராவிட ஆக்கம் இருந்தது; அந்த திராவிட ஆக்கம்தான், தனி ஆரிய மொழிகளிலிருந்து அதைப் பிரித்துக் காட்டிற்று. இன்று வழங்கால சமஸ்கிருத மொழி எனப்படுவது மேலும் மேலும் திராவிட மொழியின் ஆக்கம் பெற்றதின் விளைவாக உருவானதுதான்.'

—என்று தோழர் சி. குஞ்ஞன் இராஜா என்பவர், 'இந்து' இதழில் ஆசிரியருக்குக் கடிதம் என்ற தலைப்பில் எழுதிய கடிதம் ஒன்றில் எழுதியுள்ளார்.

திராவிட மொழி வடமொழியின் மீது ஆதிக்கம் செலுத்தியுள்ளது என்பது பற்றி அவர் மேலும் எழுதியுள்ளதாவது:—

"பிராகிருதத்திலும், இன்னபிற தற்கால வடநாட்டு ஆரிய மொழிகளிலும் பிற்காலத்தில் ஏற்பட்ட மாறுதல்களுக்கான காரணம் மேலும் மேலும் சமஸ்கிருதத்தில் திராவிட மொழிகள் பெற்ற ஆக்கம்தான்!

வேறு மொழிக்காரர்கள் இன்று இந்தியாவிலிருந்து எடுத்துக் கையாண்டிருக்கிற சொற்கள் எல்லாம் திராவிடச் சொற்களேயாகும்.

இதற்குக் காரணம், பழங்காலத்தில் இருந்த பெரும் தமிழ்ப் புலவர்களின் திறனும், சொற்களைக் கையாளும் முறையும் ஆழ்ந்த எண்ணங்களை வெளியிடும் முறையும் தான்."

## சென்னை சர்க்கார் ஊழியர்களுக்கான புதிய உத்தரவு

சென்னை, ஜூலை 31—

சர்க்காரைக் கவிழ்க்கும் நடவடிக்கைகளில் ஒரு சர்க்கார் ஊழியர் ஈடுபட்டிருந்தாலோ, ஈடுபட்டிருப்பதாகச் சந்தேகிக்கக் காரணமிருந்தாலோ, அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பவர்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதாக நம்பப்பட்டிருந்தாலோ அவரை சேவையிலிருந்து கட்டாயமாக விலக்க கவர்னர் உத்தரவிடலாம். இதற்கு வகை செய்து சென்னை சிவில் சர்வீஸ் தேச பக்தி பந்து பாதுகாப்பு விதிகளை சர்க்கார் கெஜட்டில் பிரசுரித்துள்ளனர். அக்கெஜட்டில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

புதிய விதிகளின் இத்தகைய நடவடிக்கை எடுக்கு முன்னர் அதுபற்றி ஊழியருக்கு முன்னறிவிப்பு தந்து சர்க்காருக்கு சமாதானம் கூற அவகாசம் அளிக்கப்படும். விசாரணை சமயத்தில் ஊழியர் தற்காலிகமாக விலக்கப்படுவார்; அல்லது விடுமுறையில் செல்ல அனுமதிக்கப்படலாம்.

கட்டாயமாக விடையளிக்கப்படும் ஊழியர் நஷ்டஈடு, பென்ஷன், பிராவிடெண்டு நிதி ஆகியவை அந்தந்த பதவி சம்பந்தமான விதியின் பிரகாரம் பெற உரிமையுண்டு என்றும் விதியில் கண்டுள்ளது.

## தொழில் உறவு மசோதா கைவிடப்படவில்லை!

(:)

### தொழிலாளர்—முதலாளி இருவர் உரிமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்குமாம்!

### இந்திய அமைச்சர் கிரியின் விளக்கம்

சென்னை, ஜூலை 31—

இந்திய சர்க்காரின் தொழில் உறவு மசோதா கைவிடப்பட்டுவிடவில்லை என்றும், அடுத்து நடைபெற இருக்கும் இந்தியப் பாராளுமன்ற கூட்டத்தில் அந்த மசோதா ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் இந்திய தொழில் அமைச்சர் வி. வி. கிரி கூறியுள்ளார்.

சென்னைத் தொழிற் சங்கத் தலைக் குழு ஒன்றிற்கு பதில் அளிக்கையில் கிரி மேற்கண்டவாறு கூறினார்.

இந்திய சர்க்கார் எதிர்ப்புகளின் காரணமாய் தொழில் உறவு மசோதாவைக் கைவிட்டுவிட்டதென்று முன்னர் வந்த செய்திகள் கூறின.

தொழில் உறவு மசோதா எல்லா சந்தர்ப்பங்களிலும் தொழிலாளர் சட்ட பூர்வமான கோரிக்கைகளைப் பாதுகாக்குமென்றும் அதேபோல் முதலாளிகளின் உரிமைகளையும் இந்த மசோதா பாதுகாக்கும் என்றும் கிரி மேலும் கூறினார்.

## குன்றத்தூர் தி. மு. கழக சமூகப்பணி!

4—6—54ல் குன்றத்தூரில் நடைபெற்ற திருவிழாவை யொட்டி, இரவு 2-மணிக்கு வாணவேடிக்கை நடைபெற்றது. வாணத்தின் நெருப்புத்துளி மேட்டுத் தெருவிலிருக்கும் ஓலை கொட்டகையை நாசமாக்கியதுடன், ஆறு ஏழைக் குடும்பங்களும் தங்க வீடில்லாமல் தவித்தது. விழா நடத்திய முக்கியஸ்தர்களை இதற்கு நஷ்டஈடு கேட்டதற்கு, நாங்கள் நடத்திய வாணவேடிக்கையால் ஏற்பட்டதல்ல இச்சம்பவம் என்று கூறிவிட்டனர்.

தி. மு. கழகத்தின் சார்பில் வசூல் கமிட்டி நியமித்து ஊர் பொது மக்களிடம் பணம் வசூல் செய்தும், கொட்டகை கட்டுவதற்கும் பணம் போதவில்லை; மிகுதி செலவிற்கு கழக நிதியிலிருந்து பணம் எடுத்து அந்த 6 குடும்பத்தினருக்கும் கொட்டகை கட்டி கொடுக்கப்பட்டது.

| | |
|---|---|
| பொது மக்களிடமிருந்து வசூலானது | ரூ 154—0—0 |
| கழகப் பணம் | ரூ 125-12—0 |
| செலவானது | ரூ 279-12—0 |

## ஆசம்பாக்கம் நாடக மன்றம்

25—7—54-ல் நிறுவப்பட்ட இம்மன்றத்திற்கு நிர்வாக உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்: எம். பக்கிரிசாமி; செயலாளர்: ஆ கோ. அன்பின் செல்வம்; பொருளாளர்: இராஜகீர்த்தி

## 'காலப்போக்கை அனுசரித்து காலனி நாடுகளை விட்டு வெளியேறுக!"

### ஏகாதிபத்தியங்களுக்கு அறிவுரை!

### 'நியூயார்க் டைம்ஸ்'

இந்தியாவில் பிரெஞ்சுக்காரர்களும் போர்த்துகீசியர்களும் கொஞ்சம் சிறு சிறு ஆதிக்க இடங்களை இன்னமும் விடாப்பிடியாக வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டித்து 'நியூயார்க் டைம்ஸ்' என்ற இதழ் தலையங்கம் தீட்டியுள்ளது. 'இந்தக் கிழக்கின் சரித்திர மூலங்கள் எப்படி இருப்பினும் தற்கால இந்தியாவில் அந்த அன்னிய ஆதிக்க இடங்கள் இருப்பதற்கு நியாயமில்லை; அது மிகவும் வருந்தத்தக்கது,' என்று குறிப்பிட்டுள்ளதுடன், இன்று உலகத்தில் நிலவுகிற காலனி முறையை, மேற்கத்திய வல்லரசுகள், காலப்போக்கை அனுசரித்து, ஒழித்துக்கட்டுவதற்கு முன்வர வேண்டும் எனவும் அத்தலையங்கத்தில் 'நியூயார்க் டைம்ஸ்' கோரியுள்ளது.

## நாகர்கோவிலில் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக இருக்கும் தன்மையில் அமையவேண்டும்.'

இக்கூட்டத்தில், தோழர்கள் என். முத்து, எம். அய்யலுசாமி, என். வி தொத்தி, கே. என். ராசமாறன், மு. வசனப்பித்தன், பழனியப்பன் மதுசுதா, கந்தசாமி, சோமனுதன், மணி, மதுரைத்தம்பி, காவேரி, முனியப்பன், சண்முக சுந்தரம், ராமனுஜன், பாலகிருஷ்ணன், ரத்தினம், கே. சி. மணி, சேதுராமன், பாண்டி, ராயப்பன், மீனாட்சி சுந்தரம், இந்திரஜித்து, இராவணன், செங்குட்டுவன், சுந்தரம் ஆகியோர் பேசினர்.

திராவிட முன்னேற்றக் கழகத் [illegible] தோழர் இரா. [illegible] [illegible], எம். [illegible] அண்ணா [illegible] [illegible] [illegible] [illegible] ஆகியோர் : கி. [illegible] [illegible]

## பாரம் அதிகம் போடாதே!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ரக, அனுதைகளாக்கிற்று. பல கோடி ரூபாய் பெருமான பொருட்சேதம்! சி. ஆர் அரசாங்கம், புயலால் அவதிப்படுவோருக்கு உதவ பல லட்சம் ரூபாய் செலவிட வேண்டியிருந்தது. இதிலிருந்து சி. ஆர். கற்றுக்

கொள்ளவேண்டிய பாடம்—

"கடவுள் மீது அதிகமான பாரம் போடாதே" என்பதுதான்!

* 'ரேஷனலிஸ்ட்'—என்னும் ஆங்கில இதழிலிருந்து எடுக்கப்பட்டது.